**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.~~P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102171

1. District : மாவட்டம் Coimbatore District | PS: காவல்நிலையம் VSACCBE | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 13/24 | Date: நாள் 06.11.2024 08.30hrs

2. (i) Act சட்டம்: The prevention of corruption Act 1988 as amended by the pct Act (Amendment) 2018 | Sections பிரிவுகள்: 7(b) of the prevention of corruption Act 1988.
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 31.10.24 | Date to : நாள் வரை 1700hrs
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 01.11.24 | Time to : நேரம் வரை 1100hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.11.2024 | Time : நேரம் 07.45hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD VOL-II | Time : நேரம் 07.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் as about 12km Southwest Direction
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Maruthamalai Adivaram Coimbatore District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Gnanaprakasam 53 | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Arumugam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் photography | (g) Address முகவரி 131(A) Bus Stand Opposite Maruthamalai Adivaram coimbatore

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Narayana kutty, forest Guard, Maruthamalai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP 240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. [illegible] 6.11.24 06/11/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

D. SHEELA

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் Inspector of police.
Rank: நிலை ..................No. எண் .............
Vigilance and Anti Corruption Coimbatore.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2024/ AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption(Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

இன்று 06.11.2024-ம் தேதி புதன்கிழமை காலை 07.45 மணிக்கு காவல் ஆய்வாளர் D.ஷீலா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, கோயம்புத்தூர், மருதமலை அடிவாரம், பேருந்து நிலையம் எதிர்புறம், கதவு எண்-131/A என்ற முகவரியில் வசித்தவரும் திரு.ஆறுமுகம் என்பவரது மகன் திரு.A.ஞானபிரகாசம் என்பவர் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சுசெய்யப்பட்டு கையொப்பமிட்ட புகாரை என்னிடம் கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புனர் A.ஞானபிரகாசம், வயது-53, த/பெ.ஆறுமுகம், 131A, பஸ் ஸ்டாண்டு எதிரில், மருதமலை அடிவாரம், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கோயம்புத்தூர். மதிப்பிற்குரிய ஆய்வாளர் அவர்களே, நான் என் மனைவி ஜெகதீஸ்வரி மற்றும் குடும்பத்தினருடன் மேற்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் இருக்கும் வீட்டில் வாழ்ந்து வருகிறேன். கடந்த 30 வருடங்களாக மருதமலை அடிவாரத்தில் புகைப்படம் எடுக்கும் தொழில் செய்து வருகிறேன். அதிலும் கடந்த 1989 முதல் 2018-ம் வருடம் வரை மருதமலை தேவஸ்தானத்தில் காண்ட்ராக்ட் பெற்று சன்னதி அருகிலேயே கடை நடத்தி வந்தேன். மதுரை கோயிலில் நடந்த தீ விபத்திற்கு பின்னர் கடைகளை கான்டிராக்ட் விடுவதை இங்கு மருதமலையிலும் தவிர்த்துவிட்டார்கள், ஆகவே மருதமலை கோயிலின் அடிவாரத்தில் படியேறும் இடத்திற்கு அருகில் கடந்த 6 வருடங்களாக பெட்டிக்கடை போட்டு புகைப்படம் எடுக்கும் தொழிலை செய்து வருகிறேன். எனது பெட்டிக்கடை இருக்கும் இடத்தில் இருந்து வனத்துறையின் கட்டுப்பாடு ஆரம்பிக்கிறது. அதற்குண்டான எல்லைக்கல்லும் எனது கடையின் அருகே நிறுவப்பட்டுள்ளது. எங்கள் மருதமலை அடிவாரப் பகுதியின் வனக்காப்பாளராக திரு.நாராயணன்குட்டி என்பவர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு பணிக்கு மாறுதலாகி வந்தார். அவர் வந்ததில்

இருந்து அடிக்கடி என்னிடம் எனது பெட்டிக்கடை வனக்கட்டுப்பாடு இடத்தில் உள்ளது என்றும் அதனால் புகைப்படம் எடுக்கும் தொழில் நடத்தனும்னா, நான் அவருக்கு மாமூலாக பணம் மாத மாதம் ரூ.2000/- கொடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் கடையை அப்புறப்படுத்தி விடுவதாக மிரட்டிவந்தார். இந்நிலையில் கடந்த 31.10.2024-ம் தேதி தீபாவளி அன்று மாலை சுமார் 5 மணியளவில் எனது கடை அருகே வந்த மேற்படி வனக்காப்பாளர், அங்கு நின்றிருந்து என்னை அழைத்து என்னடா எவ்வளவு வருமானம் வந்தது, எப்போது என்னுடைய மாமூல் பணத்தை கொடுக்க போற என்று கேட்டார். நான் அவரிடம் 350 ரூபாய் தான் சார் கிடைச்சிருக்கு என்று சொன்னேன். அதற்கு அவர் அது எல்லாம் எனக்கு தெரியாது, இந்த இடத்தில் கடை தொடர்ந்து நடத்தவேண்டும் என்றால் ஒழுங்கா மாமூல் பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார், நானும் அவரின் வற்புறுத்தலின் பேரில் வேறு வழியில்லாமல் அவரிடம் நைட் ரெடி பண்ணி தரேன் என்று சொல்லிட்டேன். அதன்பின்னர் 01.11.2024-ம் தேதி சுமார் 11.00 மணிக்கு மேற்படி வனக்காப்பாளர் அவர்களை எனது செல் நம்பர் 7418458064-ல் இருந்து அவரது செல் நம்பரான 9629441397 என்ற நம்பருக்கு போனில் பேசி, அவர் தங்கியிருக்கும் குவார்டர்ஸ்க்கு போயி அவரை சந்தித்து, இரவு பணம் ரெடியாகததால் என்னால் வரமுடியவில்லை என்பதை சொல்லி ஞாயிற்றுக்கிழமை வரை டைம் கேட்டேன், அப்போது அவர் என்னிடம் பெட்டிக்கடை நடத்தி புகைப்படம் எடுக்க மாதம் அவருக்கு மாமூலாக ரூ.2,000/- பணம் கொடுக்கவேண்டும் என்றும், கடந்த மூன்று மாதம் சேர்த்து ரூ.6,000/- பணத்தை வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் கொடுக்க வேண்டும் என்றும், கொடுக்கவில்லை என்றால் எனது பெட்டிக்கடையை திங்கட்கிழமை காலி செய்துவிடுவதாக கறாராக சொன்னார். நானும் முடிந்தவரை ரெடி செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். எங்களுக்குள் நடந்த இந்த பேச்சு உரையாடல்களை நான் செல்போன் மூலம் ரெக்கார்ட் செய்திருந்தேன், அதனை DVD-யில் பதிவு செய்து கொண்டு வந்துள்ளேன். நானே தினமும் கஷ்டப்பட்டு தொழில் செய்து வருகிறேன், நான் கடையை திறந்தால் மேற்படி வனக்காப்பாளர் என்னிடம் மாமூல் கேட்பார் என்ற

பயத்திலேயே நான் கடந்த இரண்டு நாட்களாக கடையை திறக்கவில்லை. வனக்காப்பாளர் திரு.நாராயணன்குட்டி என்பவருக்கு மாதாமாதம் மாமூலாக லஞ்சப்பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. ஆகவே வனக்கட்டுப்பாடு இடத்தில் இருக்கும் எனது பெட்டிக்கடையில் புகைப்பட தொழில் தொடர்ந்து நடத்துவதற்கு, மாத மாமூலாக ரூ.2000/-பணம் என்று நிர்ணயித்து, கடந்த மூன்று மாதங்களுக்கு மொத்தம் ரூ.6000/-த்தை லஞ்சமாக என்னிடம் கேட்கும் வனக்காப்பாளர் திரு.நாராயணக்குட்டி என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் எங்களுக்குள் நடந்த உரையாடலை பதிவு செய்து வைத்திருந்த DVD-யும் இந்த புகார் மனுவுடன் இணைத்து கொடுக்கின்றேன். sd/-(xxxx) (A.ஞானபிரகாசம்) இடம்: கோவை தேதி: 06.11.2024. நான் அப்புகாரினை படித்துப்பார்த்தேன். மேலும் வாதியானவர் தனது புகார் மனுவுடன் சமாப்பித்த DVD-R-ல் உள்ளடங்கிய உரையாடல் பதிவுகள் கொண்ட Audio file-ஐ கணினியில் போட்டு கேட்டுப் பார்த்ததில் இருந்தும், மேற்படி புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும் கோவை மாவட்டம் மருதமலை அடிவாரப் பகுதியின் வனக்காப்பாளராக பணிபுரியும் திரு.நாராயணன்குட்டி என்பவர் புகார்தாரரிடம் வனக்கட்டுப்பாடு இடத்தில் இருக்கும் புகார்தாரரின் பெட்டிக்கடையில் புகைப்பட தொழில் தொடர்ந்து நடத்துவதற்கு, மாத மாமூலாக ரூ.2000/-பணம் என்று நிர்ணயித்து, கடந்த மூன்று மாதங்களுக்கு மொத்தம் ரூ.6000/-த்தை லஞ்சமாக கேட்டிருப்பது தெரியவருகிறது. மேலும் எதிரியின் செயல்பாடுகள் குறித்து விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் ஏதுமில்லை என்பதும் தெரியவந்தது. எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 06.11.2024-ம் தேதி 08.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2024/AC/CB, u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as

amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி மேற்படி எதிரி திரு.நாராயணன்குட்டி என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு மற்றும் 63 (4)(C) OF B.S.A. சான்றுடன் கூடிய DVD-R with Hash Value report ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், இதனிடையே வாதி தனது புகார் மனுவுடன் சமர்ப்பித்த DVD-R-ல் உள்ளடங்கிய உரையாடல் பதிவுகள் கொண்ட Audio file-ஐ வழக்கின் விசாரணைக்காக மற்றொரு DVD-R-ல் முறைப்படி காப்பி செய்தும் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

06/11/24

(D.ஷீலா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.